O.S. No. 53/2019 நாள்.01.12.2022

PW1 – பாப்பாத்தி

<u>குறுக்கு விசாரணை</u>

1. வேலு உடையாருக்கு எவ்வளவு சொத்துக்கள் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வேலுவின் மனைவி வள்ளி என்றால் சரிதான். வேலுக்கு சுப்பிரமணியன், உடையார், கண்ணன் ஆகிய மூன்று ஆண் வாரிசுகள் ஆவார்கள். முத்து மற்றும் நானும் பெண் வாரிசுகள். முத்து எனக்கு முன் பிறந்த சகோதரி ஆவார். எனக்கு தற்போது 40 வயதாகிறது. எனக்கு எத்தனை வருடத்திற்கு முன்னர் திருமணம் நடைபெற்றது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் எனக்கு வயது 50 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. எனது சகோதரிக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்ற விவரம் எனக்கு தெரியாது. 1979 ம் ஆண்டிற்கு முன்னர் எனது சகோதரி முத்துவுக்கு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். எனது சகோதரி முத்து 1984 ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது அக்கா இறந்த பிறகு அவரது கணவரை நான் திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரிதான். மேற்படி திருமணம் 1986 ல் நடைபெற்றது என்றால் சரிதான். எனது சகோதரிக்கும் எனது கணவருக்கும் பிறந்தவர்கள் பாண்டி, தமிழ்செல்வி, வைரவசுந்தரம் என்றால் சரிதான்.

3. நான் செல்லதுரையை திருமணம் செய்த பிறகு முத்துலெட்சுமி, பழனி ஆகிய இரண்டு பிள்ளைகள் உள்ளனர். நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில் முத்துலெட்சுமி, பழனி, வைரவசுந்தரம் ஆகியோர்கள் இல்லை என்றால் சரிதான்.மேற்படி மூன்று நபர்கள் பற்றிய விவரம் நான் எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் உயிருடன் இருக்கும்போதுதான் எனக்கும், எனது அக்கா முத்துவுக்கும் திருமணம் செய்து

வைத்தார் என்றால் சரிதான். எனது அக்கா முத்துவிற்கு திருமணம் செய்யும்போது சீர் வரிசைகள் செய்யப்பட்டது என்றால் செய்யவில்லை. எனக்கும் செல்லதுரைக்கும் திருமணம் நடைபெறும்போது 1ம் பிரதிவாதி அதில் கலந்து கொள்ளவில்லை, சீர்வரிசகைள் எதுவும் செய்யவில்லை.

4. சுப்பிரமணியன் எனது திருமணத்தின்போது எனக்கும் 5 பவுன் நகையும், செல்லத்துரைக்கு 2 பவுன் நகையும் சீர்வரிசையாக கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி எனது திருமணத்தின்போது நகைகள் சீர்வரிசையாக போடப்பட்டது வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கான சர்வே எண்கள் விவரம் எனக்கு தெரியாது. நான்குமால்கள் பற்றி எனது பிராதில் சொல்லவில்லை என்றால் நான்குமால் விவரங்கள் எனக்கு தெரியாது. நார்நகல் நாய்குமாரி என்ற வயலை 2ம் பிரதிவாதி கண்ணன் விவசாயம் செய்து வருகிறார் என்றால் நாங்கள் அனைவரும் விவசாயம் செய்து வருகிறோம்.

5. மேற்படி இரண்டு வயல்களின் விஸ்தீரணங்களும் எனக்கு தெரியாது யோசித்து சொல்லவேண்டும். மலணி, திருப்பாக்கடல், பொம்பளசை, முத்துக்களை , தேவமாக்காள் ஆகிய வயல்களை 1ம் பிரதிவாதி சுப்பிரமணி அனுபவம் செய்து வருகிறார் என்றால் நாங்களும் சேர்ந்துதான் அனுபவம் செய்து வருகிறோம். மேற்படி வயல்களின் அளவுகள் என்ன என்று எனக்கு தெரியாது ஏனென்றால் நான் படிக்கவில்லை. வேலு உயிருடன் இருக்கும்போதே சொத்துக்களை அவரது ஆண் வாரிசுகளுக்கு பாகப்பிரிவினை செய்து கொடுத்துவிட்டார் என்றும் அதன்படி கண்ணன் மற்றும் சுப்பிரமணி ஆகிய இருவரும் மேற்சொன்னவாறு அவரவர் பாகத்தை விவசாயம் செய்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல பாகப்பிரிவினை எதுவும் நடைபெறவில்லை.

6. குடும்பத்தில் மூத்த ஆண் மகனுக்கு சேட்டபாகம் என்ற கூடுதலான பாகம்

ஒதுக்குவது வழக்கம் பொதுவாக உண்டு ஆனால் எனது குடும்பத்தில் பாகப்பிரிவினை நடைபெறவில்லை. வேலு உயிருடன் இருக்கும் காலக்கட்டத்தில் சேட்டபாகம் என்ற முறையில் திருப்பாக்கடல், பொம்பளசை என்ற இரண்டு இடங்களை சுப்பிரமணியனுக்கு கூடுதலாக ஒதுக்கினார் என்றும் நான் வழக்கிற்காக இல்லை என்று சொல்கிறேன் என்றால் சொன்னால் சரியல்ல. கடந்த 15 ஆண்டுகளாக விவசாய நிலங்களை அனுபவம் செய்பவர்களுக்கு பயிர் இன்சூரன்ஸ திட்டம் மூலம் நஷ்டஈடு வழங்கப்பட்டு வருகிறது என்றால் சரிதான்.

7. மேற்படி நஷ்டஈடுகளை கண்ணன் மற்றும் சுப்பிரமணியனும் பெற்று கொள்கிறார்கள் என்றால் நானும் பெற்றுக்கொள்கிறேன். மேற்படி பயிர் இன்சூரன்ஸ் மூலம் நஷ்டஈடு பெற்றத்தற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி பாகப்பிரிவினையின் படி கண்ணன் மற்றும் சுப்பிரமணியன் ஆகிய இருவர்களும் பயிர் இன்சூரன்ஸ் மூலம் நஷ்டஈடு வாங்கி கொண்டு இருக்கிறார்கள் நானும் சேர்ந்து வாங்கி கொண்டிருக்கிறேன் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இன்சூரன்ஸ் பணத்தை கண்ணன் மற்றும் சுப்பிரமணியனுக்கு கொடுக்க கூடாது என்று கிராம நிர்வாக அதிகாரியிடம் ஆட்சேபனை தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான்.

8. மேற்படி பயிர் இன்சூரன்ஸ் நஷ்டஈடு தொகையை கண்ணன் மற்றும் சுப்பிரமணியனுக்கு மட்டும் கொடுக்ககூடாது என கிராம நிர்வாக அதிகாரியிடம் எப்போது ஆட்சேபனை தெரிவித்தேன் என்றால் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் ஆட்சேபனை தெரிவித்தேன். கிராம நிர்வாக அதிகாரியிடம் ஆட்சேபனை தெரிவித்தேன் என்று சொல்வது வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல கண்ணன் மற்றும் சுப்பிரமணியனுடன் சேர்ந்து நானும் பயிர் இன்சூரன்ஸ் நஷ்டஈடு தொகை பெற்றுக் கொண்டிருக்கிறேன்

என்று வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சகோதரி முத்து எனது தந்தை இறப்பிற்கு முன்னரே 1979ம் ஆண்டு இறந்து விட்டார் என்றால் சரிதான். அதனால் முத்துவின் பிள்ளைகளுக்கு நான் கேட்டுள்ள விகிதாச்சாரப்படி பாகம் கோர முடியாது என்றால் சரியல்ல.

9. எனக்கு 1986ம் ஆண்டு திருமணமாகிவிட்டதால் நான் கோரிய படி பாகம் எனக்கு கிடைக்ககூடியது இல்லை என்றால் சரியல்ல. எனது பிள்ளைகள் முத்துலெட்சுமி, பழனி, வைரவசுந்தரம் ஆகியோர்களை தரப்பினர்களா சேர்க்கவில்லை என்ற அடிப்படையில் இவ்வழக்கு தள்ளுபடி செய்யய்கூடியது என்றால் சரியல்ல. மேலும் வேலுவிற்கு தாவா சொத்துக்களை தவிர இன்னும் சில சொத்துக்கள் உள்ளதால் இவ்வழக்கு பகுதி பாகப்பிரிவினை என்ற சோதத்திற்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. வேலுவிற்கு வீடு உள்ளதா என்றால் உள்ளது மேற்படி வீடு இடிந்துவிட்டது. அதன்பிறது எனது தகப்பனார் இடத்தில் சுப்பிரமணி வீடு கட்டி குடியிருந்து வருகிறார். கண்ணன் தனியாக வீடு கட்டியுள்ளார். இடிந்துபோன வீட்டிற்கு நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை அந்த வீட்டிற்கு எனது அப்பா பெயரில் பட்டா உள்ளது.

10. சுப்பிரமணியன் கட்டியுள்ள வீட்டிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வீட்டின் சர்வே எனக்கு தெரியாது அந்த வீடு ஓட்டு வீடு ஆகும். மேற்படி வீடு கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டியது ஆகும். தாவா சொத்து உள்பட வேலு உடையாருக்கு பாத்தியப்பட்ட மொத்த சொத்துக்களையும் அவரது காலக்கட்டத்தில் ஆண் வாரிசுகளுக்கு பாகப்பிரிவினை செய்து கொடுத்தார் என்றும் அதன்படி கண்ணன் மற்றும் சுப்பிரமணி ஆகியோர்கள் அவரவர் பாகத்தில் அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி சுப்பிரமணியன் நார்நகல், நாய்குமாரி இரண்டு இடங்களை கண்ணனுக்கு கொடுத்துவிட்டு மற்ற இடங்களான தேவமாக்காள், முட்டுதளை, பொம்பளசை, மலணி அவர் வைத்துள்ளார்.

11. 1 மற்றும் 2 ஆவணங்கள் வேலு பெயரில் தாக்கலாகி உள்ளதால் அவற்றைக்கொண்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் மேற்படி ஆவணங்களின் மூலம் தாவா சொத்துக்களில் நான் பாகம் கோர உரிமை இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் கேட்கும் பரிகாரம் கிடைக்ககூடியது இல்லை என்றால் சரியல்ல.